**செப்டம்பர் – 28**

# TNPSC துளிகள்

- ஐரோப்பாவின் வளமான மொழியியல் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தினை கொண்டாடும் வகையில் 2001 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செப்டம்பர் 26 ஆம் தேதியன்று ஐரோப்பிய மொழிகள் தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - உலகின் அனைத்து மொழிகளிலும் சுமார் 3% பங்குடன், ஐரோப்பாவில் தோராயமாக 225 பூர்வீக மொழிகள் உள்ளன.
- அணு ஆயுதங்களின் அச்சுறுத்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அவற்றை ஒழிப்பதை ஊக்குவிப்பதற்காகவும், ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 26 ஆம் தேதியன்று அணு ஆயுதங்களை முற்றிலும் ஒழிப்பதற்கான சர்வதேச தினமானது அனுசரிக்கப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## விஜயக் திட்டம்




- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று லடாக்கின் கார்கிலில், எல்லைச் சாலைகள் அமைப்பின் (BRO) விஜயக் திட்டத்தின் 15வது ஸ்தாபன/எழுச்சி தினம் கொண்டாடப் பட்டது.
- இந்த திட்டமானது, 15 ஆண்டுகளுக்கும் மேலாக லடாக் முழுவதும் 1,400 கிலோ மீட்டருக்கும் மேலாக உள்ள தொலைவிலான சாலைகளையும் 80 முக்கியப் பாலங்களையும் கட்டமைத்துப் பராமரித்து வருகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மலைப் பகுதிகள் போன்ற உயரமான இடங்களுக்கான போக்குவரத்து இணைப்பிற்கான சாதனையாக குறுகிய நாட்களுக்குள் அதாவது குளிர்கால வழித்தட தடுப்புக் காலத்திற்குப் பிறகு 31 நாட்களுக்குள் உத்தி சார்ந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்த சோஜிலா கணவாய் மீண்டும் திறக்கப்பட்டது.
- 1,200 கோடி ரூபாய் மதிப்பிலான விரிவாக்கத் திட்டத்தில் சாலைகளை அகலப் படுத்துதல், சுரங்கப்பாதைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல் மற்றும் மேம்படுத்தப் பட்ட

கட்டுமானத் தொழில்நுட்பங்களை உட்சேர்த்தல் ஆகியவை அடங்கும்.

## சீக்கியர்களுக்கான ஆனந்த் திருமணப் பதிவு




- இந்திய உச்ச நீதிமன்றமானது, 17 மாநிலங்கள் மற்றும் 8 ஒன்றியப் பிரதேச அரசுகளிடம், 1909 ஆம் ஆண்டு ஆனந்த் திருமணச் சட்டத்தின் கீழ் சீக்கியத் திருமணங்களைப் பதிவு செய்வதற்கான விதிகளை 4 மாதங்களுக்குள் வகுக்க உத்தரவிட்டுள்ளது.
- அதற்கான விதிகள் வகுக்கப்படும் வரையில், மாநில அரசுகள் ஆனது சீக்கியத் திருமணங்களுக்கான சட்டப்பூர்வ அங்கீகாரத்தை உறுதி செய்து, ஆனந்த் கராஜ் திருமணங்களை ஏற்கனவே உள்ள சட்டங்களின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.
- ஆனந்த் திருமணச் சட்டம் (1909) ஆனது சீக்கியத் திருமணங்களைச் சட்டப்பூர்வமாக அங்கீகரித்தாலும், ஆரம்பத்தில் அந்தச் சட்டத்தில் பதிவுகளுக்கான வழிமுறைகள் இல்லை.
- 2012 ஆம் ஆண்டு சட்டத் திருத்தம் மாநில அரசுகள் பதிவுகளுக்கான விதிகளை உருவாக்க கட்டாயப்படுத்தியது.
- இருப்பினும், இந்தச் சட்டத்தில் விவாகரத்து அல்லது திருமணத் தகராறுகள் குறித்து குறிப்பிடப் படாததால் அதில் இடைவெளிகள் உள்ளன.
- சீக்கியத் தலைவர்கள் சமயம் சார்ந்த பழக்கவழக்கங்கள் மற்றும் சட்ட உரிமைகளை முழுமையாகக் கையாளும் ஒரு விரிவான சட்டத்தை உருவாக்குமாறு வலியுறுத்தச் செய்கின்றனர்.

## முப்படைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்ப கருத்தரங்கு

- புது டெல்லியில் நடைபெற்ற முதல் முப்படைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்பக் கருத்தரங்கை (T-SATS) முப்படை இராணுவ தலைமைத் தளபதி (CDS) தொடங்கி வைத்தார்.
- இந்தியாவிற்கான அதிநவீன, உள்நாட்டு பாதுகாப்புத் தொழில்துறை தொழில் நுட்பங்களை இணைந்து உருவாக்குவதற்காக கல்வி நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், தொழில் துறைகள் மற்றும் ஆயுதப்படைகளை ஒன்றிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- எதிர்கால ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை முறைப்படுத்துவதற்காக சென்னையின் இந்தியத் தொழில்நுட்ப கல்விக் கழகம், மணிப்பால் உயர் கல்விக் கழகம், இராஷ்ட்ரிய

ரக்சா பல்கலைக்கழகம் மற்றும் நிர்மா பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

- இந்தக் கருத்தரங்கின் கருத்துரு, "விவேக் வா அனுசந்தன் சே விஜய்" (ஞானம் மற்றும் ஆராய்ச்சி மூலம் வெற்றி) என்பதாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## BIMSTEC இளம் தலைவர்கள் உச்சி மாநாடு




- இந்திய அரசானது, BIMSTEC (பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு) அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் இளம் தலைவர்கள் உச்சி மாநாட்டை அசாமின் கௌஹாத்தியில் நடத்தியது.
- இந்த உச்சி மாநாடு ஆனது 6வது BIMSTEC உச்சி மாநாட்டில் பிரதமர் அறிவித்த 21-அம்ச செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

- இந்த உச்சி மாநாடு 21 ஆம் நூற்றாண்டின் மீள்தன்மை, உள்ளடக்கிய மற்றும் பன்முகத் தன்மைக்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய தலைமைத்துவத்தை மையமாகக் கொண்டது.
- BIMSTEC கலாச்சார முன்னெடுப்புகளுக்கு ஏற்ப 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 'Sapt-Sur' என்ற தலைப்பில் முதலாவது BIMSTEC பாரம்பரிய இசை விழாவையும் இந்தியா நடத்தியது.

## இந்திய இறால் வரிச் சட்டம்




- லூசியானா இறால் மற்றும் கெளுத்தி மீன் தொழில் துறைகளைப் பாதுகாப்பதற்காக அமெரிக்க மேலவை உறுப்பினர்கள் இந்திய இறால் வரிச் சட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளனர்.
- உள்நாட்டு வணிகங்களுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில், குறைந்தபட்ச ஒழுங்குமுறைகளுடன் இந்திய இறால் ஆனது அமெரிக்கச் சந்தையில் "அதிக அளவில் திணிக்கப் படுகிறது" என்று இந்த மசோதா குற்றம் சாட்டுகிறது.
- அமெரிக்காவிற்கான இறால் ஏற்றுமதியில் இந்தியா மிகப்பெரிய பங்கைக் கொண்டு உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஈக்வடார் இடம் பெற்றுள்ளது.
- 2023–24 ஆம் ஆண்டில், இந்தியா 7.16 லட்சம் மெட்ரிக் டன் அளவிலான பதப்படுத்தப்பட்ட இறால்களை ஏற்றுமதி செய்து, 4.88 பில்லியன் டாலர் வருவாய் ஈட்டியது.
- இந்தியாவின் மொத்தக் கடல் சார் உணவு ஏற்றுமதி வருவாயில் இறால் மூலமான வருவாய் ஆனது டாலர் அடிப்படையில் 66.12 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- இந்திய ஏற்றுமதியாளர்கள் ஏற்கனவே 50 சதவீத அளவிலான அனைத்துப் பொருட்களுக்கான இறக்குமதி வரி, 5.77 சதவீதப் பதிலீட்டு வரி மற்றும் 2.65 சதவீத இறக்குமதிக் குவிப்புத் தடுப்பு வரியை செலுத்தி வருகின்றனர்.

## மைத்ரி 2.0

- மைத்ரி 2.0 பன்னாட்டு தொழிற்காப்புத் திட்டத்தின் மூலம் இந்தியாவும் பிரேசிலும் வேளாண் சார் புத்தாக்கங்களில் கூட்டாண்மையை வலுப்படுத்துகின்றன.

- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையானது (ICAR), பிரேசில்-இந்தியா இடையிலான பன்னாட்டுத் தொழிற்காப்புத் திட்டத்தின் இரண்டாவது பதிப்பான மைத்ரி 2.0 திட்டத்தினை புது டெல்லியில் அறிமுகப்படுத்தியது.
- இந்தியாவும் பிரேசிலும் 77 ஆண்டுகால வேளாண் கூட்டாண்மையைப் பேணி வருகின்றன.
- வலுவான வேளாண் உணவு சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதற்காக இந்திய மற்றும் பிரேசிலிய நாட்டின் கண்டுபிடிப்பாளர்களிடையே கூட்டு உருவாக்கம் மற்றும் இரு வழிக் கற்றலை இந்தத் திட்டம் ஊக்குவிக்கிறது.




## K நுழைவு இசைவுச் சீட்டு – சீனா




- வெளிநாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறமைகளை ஈர்ப்பதற்காக சீன அரசானது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் புதிய K நுழைவு இசைவுச்

சீட்டினை அறிமுகப்படுத்த உள்ளது.

- இந்த நுழைவு இசைவுச் சீட்டு STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்) துறைப் பட்டதாரிகள் மற்றும் சிறந்த உலகளாவிய நிறுவனங்களின் நிபுணர்களை இலக்காகக் கொண்டுள்ளது.
- K நுழைவு இசைவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் தளர்வுகள் மிகுந்த நுழைவு, நீட்டிக்கப் பட்ட செல்லுபடியாகும் தன்மை மற்றும் ஆராய்ச்சி, கல்வி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றில் பரந்தச் செயல்பாட்டு நோக்கம் ஆகியவற்றினால் பயனடைவார்கள்.
- இந்த நுழைவு இசைவுச் சீட்டு சீன முதலாளிகளிடமிருந்துப் பெற வேண்டிய நிதி உதவித் தொகைக்கான (ஸ்பான்சர்ஷிப்) தேவையை நீக்குகிறது.
- K நுழைவு இசைவுச் சீட்டு ஆனது 2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட உயர் மட்ட திறமையாளர்களுக்கான தற்போதைய R நுழைவு இசைவுச் சீட்டு வசதியினை அடிப்படையாகக் கொண்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நிலவினை ஒத்த வானியல் அமைப்பு 2025 PN7




- பூமிக்கு அருகில் சுற்றி வரும் 2025 PN7 என்ற புதிய நிலவினை ஒத்த வானியல் அமைப்பின் கண்டுபிடிப்பை வானியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.
- 2025 PN7 ஆனது கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாக சூரியனைச் சுற்றியுள்ள பூமியின் சுற்றுப் பாதைக்கு அருகில் ஒரு குறிப்பிட்டப் பாதையைப் பின்பற்றி வருகிறது ஆனால் இது சமீபத்தில் தான் கண்டறியப்பட்டது.
- சுமார் 30 மீட்டர் (98 அடி) விட்டம் கொண்ட இதனை, அதன் சிறிய அளவு மற்றும் குறைந்தப் பிரதிபலிப்பு காரணமாக கண்டறிவது கடினமாக இருந்தது.
- ஒரு நிலவினை ஒத்த வானியல் அமைப்பு சூரியனுடன் 1:1 என்ற ஒத்திசைவில் பூமியின் சுற்றுப் பாதையைப் பகிர்ந்து கொள்கிறது என்றாலும், அது புவியுடன் ஈர்ப்பு விசையால் பிணைக்கப் படவில்லை.
- பூமியின் ஈர்ப்பு விசையால் தற்காலிகமாகப் ஈர்க்கப்படும் குறு-நிலவுகளைப் போல அல்லாமல், நிலவினை ஒத்த அமைப்புகள் பூமியுடன் சேர்த்து சூரிய சுற்றுப்பாதையில் இருக்கும்.
- 2025 PN7 ஆனது பூமியைப் போன்ற சுற்றுப் பாதைகளைக் கொண்ட பூமிக்கு அருகில்

உள்ள சிறுகோள்களின் அர்ஜுனா குழுவினைச் சேர்ந்தது.

- காமோ'ஒலேவா மற்றும் 2024 PT5 போன்ற பிற அறியப்பட்ட நிலவினை ஒத்த அமைப்புகள் நிலவின் தோற்றத்திற்கான அறிகுறிகளைக் கொண்டுள்ளன.
- 2025 PN7 ஆனது குதிரை லாட வடிவச் சுற்றுப்பாதையில் செல்வதற்கு முன்பு சுமார் 60 ஆண்டுகள் பூமிக்கு அருகில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கடற்பசு வளங்காப்பகம் - IUCN

- அபுதாபியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு IUCN உலகப் பாதுகாப்பு மாநாடு ஆனது இந்தியாவின் கடற்பசு வளங்காப்பகத்தினை அங்கீகரிக்கும் ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- கடல்சார் வளங்காப்பை மேம்படுத்துவதற்கு இந்திய அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒத்துழைப்பினை மேற்கொள்வதற்கு IUCN வலியுறுத்தியது.
- இந்தியாவின் முதல் கடற்பசு வளங்காப்பகம் தமிழ்நாட்டின் பாக் விரிகுடாவில் அமைந்துள்ளது.
- இந்த வளங்காப்பகம் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின கீழ் நிறுவப்பட்டது.
- கடற்பசு வளங்காப்பகம் வடக்கு பாக் விரிகுடாவில் 448.34 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது.
- இது கடற்பசுக்களுக்கு உணவளிக்கும் இடமாகச் செயல்படும் 12,250 ஹெக்டேர் பரப்பளவிலான கடல் புல்வெளிகளைப் பாதுகாக்கிறது.
- கடற்பசுக்கள் (டுகோங் டுகோன்) ஆனது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அருகும் அபாயத்தில் உள்ள இனங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.




## லாக்டிஃப்ளுஸ் காசியானஸ்


- மேகாலயாவில் லாக்டிஃப்ளுஸ் காசியானஸ் எனும் புதிய உண்ணக் கூடிய காளான் இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- மேகாலயாவின் கிழக்கு காசி மலைகளின் பைன் (ஊசியிலைக்) காடுகளில் லாக்டிஃப்ளுஸ் காசியானஸ் என்ற புதிய உண்ணக் கூடிய காளான் இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- இந்தக் காளான் வகையானது காசி பழங்குடியினரால் உள்ளூரில் டிட் இயோங்னா என்று அழைக்கப்படுகிறது.
- லாக்டிஃப்ளூஸ் இனத்தைச் சேர்ந்த லாக்டிஃப்ளூஸ் காசியானஸ் 1,600 மீட்டர் உயரத்தில் காசி ஊசியிலைக் காடுகளின் மரங்களில் வளர்கிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## OECD பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கை 2025




| | 2025 | 2026 |
|---|---|---|
| India | 6.7 | 6.2 |
| Canada | 1.1 | 1.2 |
| Germany | 0.3 | 1.1 |
| France | 0.6 | 0.9 |
| Japan | 1.1 | 0.5 |
| UK | 1.4 | 1.0 |
| US | 1.8 | 1.5 |
| Brazil | 2.3 | 1.7 |
| China | 4.9 | 4.4 |
| Russia | 1.0 | 0.7 |
| S Africa | 1.1 | 1.3 |
| World | 3.2 | 2.9 |

Note: Data for India on a fiscal year basis | Source: OECD


- ஜூன் மாதத்தில் கணிக்கப்பட்ட 2.9% விரிவாக்கத்துடன் ஒப்பிடும்போது, தற்போது OECD நாடுகளில் இந்த ஆண்டு உலகளாவிய வளர்ச்சி 3.2% ஆக பதிவாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கணிப்புகள் 2.9% ஆக மாற்றப்படாமல் வைக்கப்பட்டன.

- இது 2024 ஆம் ஆண்டில் காணப்பட்ட 3.3% வளர்ச்சியிலிருந்து, ஏற்பட உள்ள மந்த நிலையைக் குறிக்கிறது.
- இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கணிப்பை ஜூன் மாதத்தில் நிர்ணயிக்கப்பட்ட அதன் முந்தையக் கணிப்பான 6.3 சதவீதத்திலிருந்து, 2025 ஆம் ஆண்டில் 40 அடிப்படைப் புள்ளிகள் (bps) அதிகரித்து 6.7 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## சவல்கோட் அணை திட்டம்

- சிந்து நதி நீர் ஒப்பந்தம் (IWT) நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள சவல்கோட் அணைத் திட்டம் சுற்றுச்சூழல் அனுமதிக்காக புதுப்பிக்கப் பட்ட பரிசீலனையில் உள்ளது.
- 1984 ஆம் ஆண்டிலிருந்து செனாப் நதியில் அமைக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட இந்த நீர் மின் நிலையத் திட்டமானது, 1,865 மெகாவாட் அளவிலான நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2013 வழிகாட்டுதல்களுக்கு முன்பே இதற்கான திட்டம் தொடங்கப்பட்டதைக் காரணம் காட்டி வன ஆலோசனைக் குழு (FAC) ஆனது, இந்தத் திட்டத்திற்கு இந்த ஆய்வுகளிலிருந்து விலக்கு அளித்துள்ளது.
- இந்த அணைக் கட்டமைப்புத் திட்டத்தில், பெரும்பாலும் ராம்பன் மாவட்டத்தில் 2.2 லட்சத்திற்கும் அதிகமான மரங்கள் வெட்டப்படுவதுடன் 846 ஹெக்டேர் பரப்பிலான வன நிலங்கள் பாதிக்கப்படும்.
- பாகிஸ்தான் மேற்கு நதிகளை சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் கீழ் கட்டுப்படுத்துவதுடன், மத்திய-மாநிலத் தகராறுகள் மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்தத் திட்டமானது தாமதங்களைச் சந்தித்துள்ளது.
- "run-of-river" திட்டம் என்று பெயரிடப்பட்டிருந்தாலும், சவல்கோட்டில் ஒரு பெரிய நீர்த் தேக்கத்துடன் கூடிய 192.5 மீட்டர் உயரக் கற்காரை/கான்கிரீட் அணை அமைக்கப்பட உள்ளது சுற்றுச்சூழல் பாதிப்பு சார்ந்த கவலைகளை எழுப்புகிறது.




## தேசிய இணைய ஆளுகை மாநாடு 2025

- 28வது தேசிய இணைய ஆளுகை மாநாடு (NCeG) ஆனது (2025) ஆந்திரப் பிரதேசத்தின்

விசாகப்பட்டினத்தில் நடத்தப் பட்டது.

- இந்த நிகழ்வின் கருத்துரு, 'Viksit Bharat: Civil Service and Digital Transformation' என்பதாகும்.
- இந்த மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு, இணையவெளிப் பாதுகாப்பு, டிஜிட்டல் வேளாண்மை மற்றும் அடிமட்ட அளவிலான இணைய ஆளுகை சார் புத்தாக்கங்கள் போன்றவை குறித்து விவாதிக்கப்படுகிறது.
- மத்திய, மாநில, மாவட்ட மற்றும் கல்வித் துறைகளில் 19 சிறந்த முன்னெடுப்புகளுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான இணைய ஆளுகைக்கான தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய இணைய ஆளுகை விருதுகள் 2025





- முதன்முறையாக, கிராமப் பஞ்சாயத்துகள் ஆனது அடிமட்ட அளவிலான டிஜிட்டல் சேவை வழங்கலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய பிரிவின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்கான இணைய ஆளுகைக்கான தேசிய விருதுகளைப் பெற்றன.
- விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 28வது தேசிய இணைய ஆளுகை மாநாட்டில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

- நாடு முழுவதும் 1.45 லட்சத்திற்கும் மேற்பட்டப் பதிவுகளை மதிப்பீடு செய்த பிறகு, விருது பெற்றவர்களில் பின்வரும் அமைப்புகள் அடங்கும்:
    - தங்கம்: ரோகிணி கிராமப் பஞ்சாயத்து, மகாராஷ்டிரா
    - வெள்ளி: மேற்கு மஜ்லிஷ்பூர் கிராமப் பஞ்சாயத்து, திரிபுரா
    - தேர்வு மன்ற விருதுகள்: பல்சானா கிராமப் பஞ்சாயத்து, குஜராத் & சுகாதி கிராமப் பஞ்சாயத்து, ஒடிசா
- குடிமக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் முன்னெடுப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கான நிதி ஊக்கத் தொகைகள் (தங்கப் பிரிவிற்கு 10 லட்சம் ரூபாய் மற்றும் வெள்ளி பிரிவிற்கு 5 லட்சம் ரூபாய்) வழங்கப்படுகின்றன.

# முக்கிய தினங்கள்

## ஆயுர்வேத தினம் 2025 - செப்டம்பர் 23




- தனிநபர் மற்றும் சுற்றுச்சூழல் நல்வாழ்வுக்கான முழுமையான அமைப்பாக ஆயுர்வேதத்தை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆயுர்வேதம் என்ற சொல் ஆனது வாழ்க்கை என்று பொருள்படும் "ஆயு", அறிவு அல்லது அறிவியல் என்று பொருள்படும் "வேதம்" ஆகிய இந்தச் சொற்கள் ஒன்றாகச் சேர்த்து "வாழ்க்கையின் அறிவியல்" என்று பொருள்படும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்தது.
- முதல் ஆயுர்வேத தினம் ஆனது 2016 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Ayurveda for People & Planet' என்பது ஆகும்.
- 10வது ஆயுர்வேத தினமானது கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் நடைபெற்றது.

## NSS தினம் 2025 - செப்டம்பர் 24

- தேசிய சேவைகள் திட்டம் ஆனது முதன்முதலில் 1969 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- இது தூய்மையை ஊக்குவித்தல், போதைப்பொருள்களின் தவறான பயன்பாடு குறித்த விழிப்புணர்வைப் பரப்புதல், சமூகப் பொறுப்பை ஊக்குவித்தல், கலாச்சார

விழுமியங்களை வெளிப்படுத்துதல் மற்றும் இளையோர்களின் தலைமையை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தியாவில் NSS அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் இது ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Empowering Youth for a Sustainable India" என்பதாகும்.




## உலக மருந்தாளுநர்கள் தினம் 2025 - செப்டம்பர் 25





- மருந்து வழங்கீட்டில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான சமூகங்களுக்கு மருந்தாளுநர்களின் பங்களிப்புகளை அங்கீகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- இத்தினமானது மருந்தாளுநர்களின் பங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சர்வதேச மருந்துக் கூட்டமைப்பினால் (FIP) 2009 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இத்தினமானது நோயாளிகளின் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்தில் மருந்தாளுநர்களின் பங்கை எடுத்துக்காட்டும் செயல்பாடுகளுடன் உலகளவில் கொண்டாடப் படுகிறது.
- மருந்தாளுநர்களை முக்கிய சுகாதாரப் பங்குதாரராக வலியுறுத்தும் விதமாக "Think

Health, Think Pharmacist" என்பது 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

### அந்த்யோதயா திவாஸ் 2025 - செப்டம்பர் 25

- இது மகத்தான இந்தியத் தலைவரான பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- அவர் ஒரு முக்கிய சிந்தனையாளர், தலைவர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார்.
- அவர் பின்னர் பாரதிய ஜனதா கட்சி (BJP) ஆக மாறிய பாரதிய ஜன சங்கத்தின் (BJS) இணை நிறுவனர் ஆவார்.
- அவரது அந்த்யோதயா தத்துவம் சமூகத்தின் ஏழ்மையான மற்றும் விளிம்பு நிலைச் சமூகத்தினர் மீதான மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறது.




## இதரச் செய்திகள்

### திரிபுர சுந்தரி கோயில் புதுப்பிப்பு




- திரிபுராவின் உதய்பூரில் அமைந்துள்ள 524 ஆண்டுகள் பழமையான மறு மேம்பாடுகள் (மறுசீரமைப்பு) செய்யப்பட்ட திரிபுர சுந்தரி கோயிலை இந்தியப் பிரதமர் திறந்து

வைத்தார்.

- இது PRASHAD திட்டத்தின் கீழ் 54 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில் மறு மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இதன் மறுவடிவமைப்பிற்கு மத்திய அரசு (34.43 கோடி ரூபாய்) மற்றும் திரிபுரா மாநில அரசு (17.61 கோடி ரூபாய்) இணைந்து நிதியளித்தன.
- இந்தக் கோயில் ஆனது 1501 ஆம் ஆண்டில் மகாராஜா தன்ய மாணிக்யாவால் கட்டப் பட்டது.
- வங்காள ஏக்-ரத்னா (ஒற்றை முகடு உடைய) கட்டிடக்கலையில் அமைந்த இந்தக் கோவிலில் திரிபுர சுந்தரி மற்றும் சண்டி தேவியின் கருங்கல் சிலைகள் அமைந்து உள்ளன.
- இந்தக் கோயிலின் புகழ்பெற்ற பிரசாதமான மாதாபரி பேடா சமீபத்தில் மதிப்புமிக்கப் புவிசார் குறியீட்டினை (GI) பெற்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★